1986 ஏப்ரல் 28]

களில் தனி கட்டிடங்கள் கிடைக்காத காரணத்தால் திருமண மண்டபத்தில் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்றையதினம் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வாடகைக்கு இடத்தை வாங்கிக் கொடுப்பார்களானால் வாடகை கொடுக்க கூட வழிவகை இருக்கிறது. அங்கேயிருந்து முகாமை மாற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட அதிகாரிகள் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி.

(601—)*வினா எண் 2034ஏ திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு சட்ட அதிகாரிகள் (law officers) தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுல்படுத்தப் படுகிறது என்று அன்றைக்குகொடுத்த மானியக் கோரிக்கையின் கொள்கைக் குறிப்பிலே ஒரு பக்கத்தில் சொல்லப் பட்டு இருக்கிறது. அதற்காகக் கூட நன்றி சொன்னேன். ஆனால் இப்போது அதற்கு மாறாக அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று சொல்கிறார்கள். எனவே இது பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்மிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைக்குறிப்பிலே 'லா கிராஜுவேட்ஸ், பயிற்சி பெறுவதற்காக கொடுக்கின்ற திட்டம் தான் இந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று குறிப் பிடப்பட்டு இருக்கிறது. 20 ஜூனியர் லாயர்களுக்கு மாதத் திற்கு 500 ரூபாய் வீதமும் அதைக் கற்றுக் கொடுக்கின்ற அந்த லா புரஃபசருக்கு 5,000 ரூபாய் வீதமும், ஒரு ஆண்டுக்கு இந்த செலவுக்காக 1 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவிலே இந்தத்

திட்டம் ஆரம்பிக்க இருக்கிறது. அதற்கும் லா ஆபீசர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்தக் கொள்கை விளக்கத்திலே அப்படிப்பட்ட திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல ஆண்டுக்காலமாக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏன் அரிசன மக்களுக்கு, அந்த வழக்கறிஞர்களுக்கு மட்டும் இந்த சிறப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது? அப்படி எடுப்பதாலே அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம் வந்துவிடும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து, இந்த லா ஆபீசர்கள் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக இது அளிக்கப்படுகிறதா என்பதைப் பற்றிய அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் 'லா கிராஜுவேட்க்கு, முன்பு இருந்த இந்தத் திட்டத்தின் மூலமாக இந்த ஆதி திராவிட் ஜூனியர் லாயர்களுக்கு, அவர்கள் அந்தத் தொழிலை தொடங்குவதற்கு 750 ரூபாயும், அதைப்போலவே அலமாரி, புஸ்தகங்கள் வாங்குவதற்கு 750 ரூபாயும், ஆக மொத்தம் 1,500 ரூபாய் ஒரு ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் —15 பேர்களுக்கு கொடுக்கின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப்போல அடுத்து இந்தத் திட்டத்தையும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இதைப்போன்ற லா ஆபீசர்கள் தேர்வுக்கான பயிற்சி கொடுக்கின்ற திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

எரகுடியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

602—(*வினா எண். 6974)திரு.வி. தங்கவேலு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம் எரகுடியில் ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?